# 14 மாவட்டங்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூன் 16–

தமிழ்நாட்டில் நீலகிரி, கோயம்புத்தூர் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாட்டின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேலும் நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர், ஈரோடு, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

அதேபோல் நாளை மறுநாள் மற்றும் 19, 20ம் தேதிகளில் தமிழ்நாடு, புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒருசில பகுதிகளில் லேசான அல்லது மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

# உக்ரைன் நாட்டுக்கு அமெரிக்கா மேலும் ரூ.7812 கோடி ஆயுத உதவி

நியூயார்க், ஜூன் 16–

உக்ரைன் நாட்டுக்கு மேலும் ரூ.7812 கோடி ஆயுத உதவியை அமெரிக்க அறிவித்துள்ளது.

ரஷ்யா உக்ரைன் போர் நாளுக்கு நாள் கடுமையாகிக் கொண்டே வருகிறது. ரஷ்யா தற்போது டான்பாஸ் பகுதியைக் கைப்பற்ற தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது. ஏற்கனவே டான்பாஸ் பகுதியில் 80 சதவீதத்தை ரஷ்யா ஏற்கனவே கைப்பற்றிவிட்டது. மீதமுள்ள 20 சதவீதத்தை தக்கவைத்துக்கொள்ள உக்ரைன் ராணுவ வீரர்கள் ரஷ்யாவை எதிர்த்து கடுமையாக சண்டையிட்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு தான் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி போர் நடக்கும் பகுதிகளுக்கு சென்று, ராணுவ வீரர்களை நேரில் சந்தித்து, தொடர்ந்து உக்ரைன் நாட்டை பாதுகாத்து வருவதற்கு நன்றிகளை தெரிவித்தார். மேலும் ரஷ்யாவிடமிருந்து உக்ரைன் தன்னை பாதுகாத்துக் கொள்ள அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன. தூரத்தில் இருக்கும் இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் பீரங்கி ஏவுகணைகளை அமெரிக்க அரசு வழங்கியது. இந்த ஏவுகணைகளை கொண்டு ரஷ்யப் படைகளை தாக்க மாட்டோம், அவர்களின் முன்னேற்றத்தை தடுக்க மட்டுமே பயன்படுத்துவோம் என்று உறுதிமொழி அளித்திருந்தது.

இந்நிலையில் உக்ரைன் நாட்டுக்கு மீண்டும் கூடுதல் ஆயுத உதவி வழங்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஒப்புதல் அளித்துள்ளார். குறிப்பாக ரஷ்யா தற்போது தனது தாக்குதலை கடுமையாக்கி உள்ள நிலையில், அமெரிக்க அதிபர் இந்த கூடுதல் ஆயுத உதவியை அறிவித்துள்ளார்.

கடற்படை கப்பல்களை தகர்க்கும் ராக்கெட்கள், ஹோவிட்சர் பீரங்கிகள், நவீன ராக்கெட் ஏவும் கட்டமைப்பு உள்ளிட்ட ஆயுதங்களை உக்ரைன் நாட்டிற்கு அமெரிக்கா வழங்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 7812 கோடி ரூபாய் மதிப்பில் ஆயுத உதவி வழங்கும் அமெரிக்கா, மேலும் 757 கோடி ரூபாய்க்கு உணவு, மருந்து, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய உதவிகளை வழங்கும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

# கொடுங்கையூரில் விசாரணை கைதி ராஜசேகர் மரணம்; காவல்துறைக்கு எந்த தொடர்பும் இல்லை

## கூடுதல் கமிஷனர் அன்பு பேட்டி

சென்னை, ஜுன். 16–

**கொடுங்கையூரில் கைதி ராஜசேகரின் மரணத்துக்கும் காவல்துறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதற்கு சாட்சியே பிரேத பரிசோதனை முதற்கட்ட அறிக்கை என்று சென்னை காவல்துறை வடக்கு மண்டல கூடுதல் ஆணையர் அன்பு கூறினார்.**

சென்னை கொடுங்கையூர் காவல் நிலைய விசாரணை கைதி ராஜசேகர் சந்தேக மரண வழக்கில் நேற்று பிரேத பரிசோதனை அறிக்கை வெளியாகியது. அது தொடர்பாக சென்னை காவல்துறை வடக்கு மண்டல கூடுதல் ஆணையர் அன்பு நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

‘விசாரணை கைதி ராஜசேகர் மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்தது. குடும்பத்தினரும் பல்வேறு சந்தேகங்களை எழுப்பினர். அது தொடர்பாக ராஜசேகரின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியாகி உள்ளது. அந்த அறிக்கையில் 4 காயங்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. கொடுங்கையூர் காவல்துறையினர் காலை 8 மணிக்கு விசாரணைக்காக அழைத்து வந்தனர். மதியம் 12.30 மணியளவில் உடல் நிலை பாதிக்கப்பட்டது. மாலை 4 மணிக்கு தனியார் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கிருந்து ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். மொத்தமாக இந்த நிகழ்வு 10 மணி நேரங்களில் நடந்து முடிந்து விட்டது. ராஜசேகர் மீது 27 வழக்குகள் உள்ளது. சரித்திர பதிவேடு குற்றவாளி. சந்தேகத்தின் பேரில்தான் விசாரணை நடந்தது. எதிர்பாராத விதமாக இறந்து விட்டார்.

### காயங்களால் மரணம் ஏற்படவில்லை

மாஜிஸ்திரேட் விசாரணை நடந்து வருகிறது. ஐகோர்ட் அறிவுறுத்தலின் படி டாக்டர்கள் குழு மூலம் பிரேத பரிசோதனை நடந்துள்ளது. வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது. ராஜசேகரின் உடலில் 4 காயங்கள் இருந்தது. முதல் காயம் 3ல் இருந்து 5 நாட்கள் முன்பு ஏற்பட்ட காயம், 2வது காயம் 18ல் இருந்து 20 மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட்ட காயம், 3 வது காயம் 24 மணி நேரத்தில் ஏற்பட்டது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த காயங்களால் அவர் மரணமடையவில்லை என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. காவல்துறை விசாரணையில் இருக்கும் போது ஒரு காயமும் ஏற்படவில்லை. அவர் மீது எந்த தாக்குதலும் நடத்தப்படவில்லை. அதற்கு சாட்சியாகத்தான் பிரேத பரிசோதனை அறிக்கை உள்ளது.

### விஸ்ரா அறிக்கை வந்த பிறகு முழு காரணமும் தெரியும்

எதனால் இறந்து போனார் என்பது விஸ்ரா அறிக்கை உள்பட பிற அறிக்கைகள் வந்த பிறகே தெரிய வரும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு உடல் நிலை சரியில்லை என்றால் அருகில் மருத்துவமனைக்கு தான் அழைத்து செல்ல முடியும். தனியார் மருத்துவமனைக்கு அழைத்து செல்வது என்பது தவறான நடைமுறை இல்லை. ராஜசேகரை முதலில் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது உடல்நிலை பரிசோதனை செய்யப்பட்டது. அவர் நார்மலாக இருக்கிறார் என்று டாக்டர் கூறிய பிறகே போலீஸ் பூத்திற்கு ஓய்வு எடுக்க அழைத்து சென்றனர். மறுபடியும் உடல் நிலை சரியில்லை என்பது தெரிந்த பிறகே மீண்டும் அங்குள்ள பவித்ரா மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். விசாரணைக்காக அழைத்து வரும் போது உடல் நிலை குறித்து பார்ப்பதில்லை. நீதிமன்ற காவலுக்கு செல்லும் போது தான் உடல் நிலை பரிசோதனை செய்யப்படும். போலீஸ் பூத்தில் வைத்து விசாரித்ததில் தவறில்லை. அதுவும் போலீஸ் கட்டிடம் தான். ஓய்வுக்காகத்தான் போலீஸ் பூத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அன்றைய தினம் காவல் நிலைய பணியில் இல்லை. முதல்வர் வீட்டு பாதுகாப்பு பணிக்கு சென்று விட்டார். அதனால் சட்டம் ஒழுங்கு பிரிவு காவல் ஆய்வாளர் விசாரணை நடத்தி உள்ளார். விசாரணையில் இறந்ததால் தான் முதற்கட்டமாக காவல் ஆய்வாளர் உள்பட 5 பேரை சஸ்பெண்டு செய்துள்ளோம். அவர்கள் அஜாக்கிரதையாக இருந்து இருக்கலாம். காவல்துறை தாக்கவே இல்லை என்பதே சொல்கிறது பிரேத பரிசோதனை அறிக்கை. துறைரீதியிலான விசாரணை தற்போது நடந்து வருகிறது. காவல்துறையினர் பேரம் பேசுகிறார்கள் என்ற தகவல் பொய்யானது. இது போன்ற சம்பவத்தில் யாரும் ஈடுபடவில்லை. எப்போதும் பிரேத பரிசோதனையின் முதற்கட்ட அறிக்கை தான் முதலில் வெளிவரும். எல்லா விதமாக அறிக்கைகள் வந்த பிறகே இறுதி அறிக்கை கொடுக்கப்படும். எப்படி இறந்து போனார் என்பது இறுதி அறிக்கை வந்த பிறகே தெரிய வரும். கொள்ளை வழக்கில் ஆட்டோ ஓட்டுனர் சங்கர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இது போன்ற சம்பவங்கள் வருங்காலங்களில் நிகழாமல் தடுக்கும் விதமாக அனைத்து காவல்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது. தனிப்படை போலீசாரையும் அழைத்து பல்வேறு அறிவுரைகளை வழங்கி உள்ளோம். விசாரணைக்காக அழைத்து வருபவர்கள் குறித்து முன்கூட்டியே ஆய்வு செய்ய வேண்டும். உடல் நிலை சரியில்லாத ஆட்கள், வயதானவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துவர வேண்டியதில்லை. தெளிவாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தி உள்ளோம். அதனை எப்படி கடைபிடிக்கிறார்கள் என்பது தொடர்பாக கீழ் உள்ள அதிகாரிகள் ஆய்வு செய்ய சொல்லி உள்ளோம். உதவி ஆணையர்களை ஆய்வு செய்ய சொல்லி உள்ளோம். இரவு நேரங்களில் விசாரணைக்காக யாரையும் வைக்கக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளோம். ராஜசேகர் மரணத்திற்கும் காவல்துறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.



# சென்னையில் 44–வது செஸ் போட்டி: மெய்யநாதன் தலைமையில் ஆய்வு

சென்னை, ஜூன் 16–

2021–2022 மற்றும் 2022–2023–ம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அறிவிப்புக்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அறிவிப்பில் கூறப்பட்ட திட்டங்களை விரைந்து செயல்படுத்துதல், 44–வது செஸ் விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் நடத்துதல், மற்றும் விளையாட்டரங்க பராமரிப்பு பணிகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுதல் குறித்த ஆய்வு நடைபெற்றது. இந்த கூட்டத்தில் உடனடியாக அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றிட செயல்பட வேண்டும் என அமைச்சர் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு முதன்மைச் செயலர் அபூர்வா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை செயல் அலுவலர் கா.ப.கார்த்திகேயன், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாநகராட்சி பூங்காக்களில் பராமரிப்பு பணி: சரிவர மேற்கொள்ளாத 76 ஒப்பந்த நிறுவனங்களுக்கு ரூ.1.54 லட்சம் அபராதம்

சென்னை, ஜூன் 16–

சென்னை மாநகராட்சி பூங்காக்களில் பராமரிப்பு பணிகளை சரிவர மேற்கொள்ளாத 76 ஒப்பந்த நிறுவனங்களுக்கு ரூ.1.54 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை மாநகராட்சி, பூங்காத்துறையின் சார்பில் மாநகரில் சுற்றுச்சூழலை பேணிகாக்கவும், பொதுமக்களின் பொழுதுபோக்கிற்காகவும், 738 பூங்காக்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 571 பூங்காக்கள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்த அடிப்படையில் தனியாரிடம் பராமரிப்பிலுள்ள பூங்காக்களில் ஒப்பந்ததாரர்கள் புல்வெளிகளை வெட்டி பராமரித்தல், தேவையான நேரத்தில் புல்வெளிகளுக்கிடையேயான களைகளை அகற்றுதல், நடைபாதை மற்றும் செடி, கொடிகளை சரியாக பராமரித்தல், புல்வெளி அல்லது செடிகள் அடர்த்தியாக உள்ள இடங்களில் வறண்டு அல்லது வளர்ச்சியின்றி இருப்பின் அவ்விடங்களில் புதியதாக செடி கொடிகளை உடனடியாக நட்டு பராமரித்தல் போன்ற பல்வேறு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

சென்னை மாநகராட்சி, பூங்காத்துறையின் சார்பில் 29.5.2022 முதல் 10.6.2022 வரை மேற்கொள்ளப்பட்ட களஆய்வில் மேற்குறிப்பிட்ட பராமரிப்பு பணிகளை சரிவர மேற்கொள்ளாத 76 ஒப்பந்த நிறுவனங்களுக்கு ரூ.1 லட்சத்து 54 ஆயிரத்து 718 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பூங்காக்கள் பராமரிப்பு பணியில் தொடர்ந்து குறைபாடு மற்றும் தொய்வு கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளி குழந்தைகளை தமிழக அரசின் சிறப்புப்பள்ளிகளில் சேர்க்கலாம்: உதவி உபகரணங்கள், நலத்திட்ட உதவி வழங்கப்படும்

சென்னை, ஜூன் 15–

**மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி நலனை மேம்படுத்த தமிழக அரசால் நடத்தப்படும் அரசு சிறப்புப்பள்ளிகளில் மாணவர்களை சேர்த்து பயன் பெறலாம்.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது–

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் 10 பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான அரசு சிறப்புப்பள்ளிகள், 10 செவித்திறன் குறைபாடுடையோருக்கான அரசு சிறப்புப்பள்ளிகள், 1 கை, கால், இயக்கத்திறன்பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான அரசு சிறப்புப்பள்ளிகள், 1 மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் ஆக மொத்தமாக 22 அரசு சிறப்புப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மேற்காணும் சிறப்புப்பள்ளிகளில் 2022 – 2023–ம் கல்வியாண்டிற்கு மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களின் சேர்க்கை நடைபெறுகிறது.

இச்சிறப்புப் பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கென ஆண்கள், பெண்கள் என தனித்தனி இலவச விடுதி வசதி, விடுதிகளில் தங்கி பயிலும் மற்றும் பள்ளிக்கு சென்று வீடு திரும்பும் மாணவ, மாணவியர்களுக்கு சத்தான உணவு, காற்றோட்டமான வகுப்பறைகளும், நான்கு செட் விலையில்லா சீருடை, விலையில்லா புத்தகங்கள், பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவ, மாணவியர்களுக்காக ப்ரெய்லி புத்தகங்கள், 10–ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவ மாணவியர்களுக்கு அவர்கள் எளிதாக கல்வி பயில்வதற்கு ஏதுவாக தமிழக அரசால் விலையில்லாமல் ஏஞ்சல் ப்ரோ எனும் உதவி உபகரணம் ஆகியன வழங்கப்படுகின்றன.

### வாசிப்பாளர் உதவித்தொகை

மேலும், இச்சிறப்புப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களுக்குரிய உதவி உபகரணங்களும், தமிழ்நாடு அரசின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளும், கல்வி உதவித்தொகை மற்றும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவ, மாணவியர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. மேலும், மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கென கல்வி பயில்வதற்கு ஏதுவாக சிறப்புக்கல்வி பெற்ற தகுதிவாய்ந்த ஆசிரியர்களை கொண்டு தரமான கல்வி வழங்கப்படு கிறது. இச்சிறப்புப்பள்ளி களில் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்களின் கணினி திறனை மேம்படுத்த ஏதுவாக சிறந்த கணிணி பயிற்றுநர்களை கொண்டு கணினிப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி நலனை மேம்படுத்த தமிழக அரசால் நடத்தப்படும் அரசு சிறப்புப்பள்ளிகளில் சேர்க்க இணைப்பில் கண்டுள்ள சிறப்புப்பள்ளி தலைமையாசிரியர்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்களை தொடர்பு கொண்டு இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


## பெயர் மாற்றம்

Asghar Ahmed Syed Abdul Khudus, தந்தை பெயர்: Syed Abdul Khudus, பிறந்த தேதி: 04.05.1951, ப.நெ.96, பு.நெ.28, பரசுராமன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SYED ASGER AHMED SYED ABDUL KHUDUS,** என்று அழைக்கப்படுகிறேன்.

Asghar Ahmed Syed Abdul Khudus

## பெயர் மாற்றம்

Subham S Alias Subham Jain, தந்தை பெயர்: Sureshchand Jain, பிறந்த தேதி: 29.11.1995, (பிறந்த மாவட்டம்: குரோம்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம்), நெ.3, 1வது குறுக்கு தெரு நாகப்பா நகர், குரோம்பேட்டை, சென்னை– 600 044, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHUBHAM KOTHARI,** என்று அழைக்கப்படுகிறேன்.

Subham S Alias Subham Jain

## பெயர் மாற்றம்

R. BHARATHI, கணவர் பெயர்: திரு P.எழில் நிலவன், பிறந்த தேதி: 25.01.1964, (பிறந்த மாவட்டம்: திருவள்ளூர்), நெ.17, Dr.ராஜேந்திர பிரசாத் தெரு, விநாயகபுரம், அம்பத்தூர் ஓ.டி., சென்னை– 600 053, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **BHARATHI. EZHIL,** என்று அழைக்கப்படுகிறேன்.

R. BHARATHI

## பெயர் மாற்றம்

Sekar Vijayabharathi, தந்தை பெயர்: Vijayabharathi, பிறந்த தேதி: 10.05.1996, ப.நெ.14/1, பு.நெ.20, சோமு தெரு, 2வது சந்து, ராயபுரம், சென்னை – 600 013, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SESHAN VIJAYABHARATHI,** என்று அழைக்கப்படுகிறேன்.

Sekar Vijayabharathi

## NAME CHANGE

I, **NARAYANAN ARAVINDH NARAYANAN,** S/o. Narayanan K, residing at 3, Buddhar Street, MGR Nagar, Chennai 600078 with passport no: M6679993, do hereby inform the public that my given name is changed from ARAVINDH NARAYANAN to **ARAVINDH** only for all purposes henceforth known as **ARAVINDH.**

- NARAYANAN ARAVINDH NARAYANAN

## மாற்று ஏல அறிவிப்பு

N.Hansraj Jain Pawn Broker, 8/1, Palla Street, Kundrathur, Chennai–600 069 என்ற அடகு வணிகர் வசம் நாள் 07.02.2019 முதல் 26.01.2021 முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு, காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்களை நாள் 25.05.2022 அன்று நடைபெற இருந்த ஏலத்தை மாற்றி நாள் 29.06.2022 அன்று காலை 10.30 மணியளவில் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் Kundrathur தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் முன்னிலையில் **ஏலதாரர் R.மனோஜ்குமார்** அவர்களால் ஏலம் போடப்படும். இந்த அறிவிப்பின் மூலமாக அடகு வைத்தவர்களுக்கும் தெரிவிக்கப் படுகிறது.

★★★★★★

## பெயர் மாற்றம்

APPURAJ RAJKAMAL (Hindu), தந்தை பெயர்: Rajkamal, பிறந்த தேதி: 09.11.1995, நெ.20/26, தமிழர் வீதி, பத்மநாபன் நகர், சூளைமேடு, சென்னை – 600 094, என்ற முகவரியில் வசிக்கும் நான் இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியதால் 28.05.2015 முதல் இனி **GHOUSE MOHIDEEN RAJKAMAL (Islam),** என்று அழைக்கப்படுகிறேன்.

APPURAJ RAJKAMAL (Hindu)

## பெயர் மாற்றம்

Sree Thamizh Saran Sathish Chandran Rajalakshmi, பிறந்த தேதி: 27.08.2019, நெ.31, விநாயகர் கோயில் தெரு, பாரதியார் நகர், பட்டாபிராம், சென்னை – 600 072, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **THAMIZH SARAN SATHISH CHANDRAN,** என்று அழைக்கப்படுகிறார்.

**Sathish Chandran,** தந்தை

## பெயர் மாற்றம்

MADARSHERIFF ATTAHULLAH SHERIFF, தந்தை பெயர்: Attahullah Sheriff, பிறந்த தேதி: 30.01.1986, ப.நெ.20, பு.நெ.22, கத்பாடா 1வது குறுக்கு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Madharsheriff Attahullah Sheriff,** என்று அழைக்கப்படுகிறேன்.

MADARSHERIFF ATTAHULLAH SHERIFF

## ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within THREE Months thereafter, I **SURESH. G, S/o. Gnanavel,** aged **29** years Permanently residing at **No. 59, Murugan Kovil Street, Nerkunam Village, Cheyyur Taluk - 603 310, Chengalpattu District** Intend having my Enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai-104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**SURESH. G,**

**தலைமை நீதிபதி**
**மோட்டார் வாகன விபத்து நீதிமன்றம்**
**சென்னை**
MP No.1/2020
in
MACTOP No.1215/2019

தெய்வநாயகி, க/பெ. (லேட்) பிரபு
ஜஸ்டின் (மைனர்),
ஜெஸ்ஸிகா (மைனர்), சென்னை
..மனுதாரர்கள்
எதிர்
சிவலிங்கம் மற்றும் இரு நபர்கள்
..எதிர்மனுதாரர்கள்
பெறுநர்
B.வளர்மதி, க/பெ. பாலையன்,
நெ.1/96, மேற்கு தெரு
மேல்பாதி, திருவாலி, சீர்காழி
தாலுக்கா, நாகப்பட்டினம்
...3ம் எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரர் MP No.1/2020 Condone delay petition and restoration மனுதாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கானது தாங்கள் வருகைக்காக வரும் 27.06.2022 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு மூலம் தங்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால் வரும் 27.06.2022 அன்று காலை 10.30 மணிக்கு மேற்குறிப்பிட்டுள்ள நீதிமன்றத்தில் முன் தாங்களோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமோ நேரில் ஆஜராகும்படி கேட்டுக் கொள்கிறேன். தவறும்பட்சத்தில் வழக்கு ஒருதலை பட்சமாக தீர்ப்பு வழங்கப் படும்.

**P.நாகூர்மீரான்**
வழக்கறிஞர்.

Karur Vysya Bank — Smart way to bank

**பெரம்பூர் கிளை:** எண்.126, ராகவன் தெரு, பெரம்பூர், சென்னை-600011
Ph: 044-2558 6878 / 89396 31871

## தங்க நகைகள் ஏல அறிவிப்பு

எங்கள் வங்கியில் கடன் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர்கள், தவணை கடந்து நெடு நாட்கள் ஆகியும் கடன் தொகையை செலுத்தி நகைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை. நோட்டீஸ் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பியும் நகைகளை மீட்கவில்லை. எனவே **இந்த விளம்பரம் கண்டவுடன் அசல் வட்டியுடன் இதர செலவுகளையும் சேர்த்து வருகிற 30.06.2022 அன்று மதியம் 2.00 மணிக்குள் வங்கியில் செலுத்தி நகைகளை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் கடனுக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவர்களின் செலவிலேயே 30.06.2022 அன்று மாலை 3.00 மணியளவில் எங்கள் வங்கி அலுவலகத்தில் வைத்து கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும்** அல்லது நிர்வாகத்தின் சௌகரியம் போல் மறு ஏல அறிவிப்பு ஏதுமின்றி வேறு தேதியில் ஏலம் விடப்படும் என்று இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளை மாற்றவோ, ஒத்திப் போடவோ கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். வாடிக்கையாளர்கள் இறந்து போய் இருப்பாரானால் ஏலம் சம்பந்தப்பட்ட விதிமுறை நிபந்தனைகள் யாவும் அந்த வாடிக்கையாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். **ஏல நிபந்தனைகளை வங்கியின் அறிவிப்பு பலகையில் காணலாம்.**

| வ. எண் | நகைக்கடன் கணக்கு எண் | கடன் பெற்றவர் | நகை எடை கிராமில் |
|---|---|---|---|
| 1. | 1871.802.5455 | சுரேஷ் T | 11.800 |
| 2. | 1871.802.5574 | ஷாகுல் ஹமீத் ஜியாவ்தீன் | 52.500 |

தேதி : 16.06.2022
இடம் : சென்னை

கிளை மேலாளர்
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

## மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்

CIN: L51102TN1982PLC009711

பதிவு அலுவலகம்: போர்ஷன் எண். எப், பழைய எண். 24, புதிய எண். 45, வெங்கட மேஸ்திரி தெரு, மண்ணடி, சென்னை–600 001.

E-mail: investor@melnbfc.com Website: www.melnbfc.com

### தபால் ஓட்டு மின்னணு வாக்களிப்பு பற்றிய அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்) பிரிவு 110 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014–ன் (விதிகள்) விதி 22, செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதி, 2015–ன் (செபி பட்டியல் கட்டுப்பாடுகள்) விதி 44 மற்றும் கோவிட் – 19 தொற்று பரவல் காரணமாக எம்சிஏ வெளியிட்ட அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க, 10 ஜூன் 2022 (கட் ஆப் தேதி) அன்று நிறுவனம் அல்லது வைப்பாளர்களிடம் நிறுவனத்தின் உறுப்பினர்களின் யாருடைய மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்பட்டுள்ளதோ அவர்கள் அனைவருக்கும் 14 ஜூன், 2022 தேதியிட்ட தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பை மின்னணு முறையில் அனுப்பும் பணியை நிறுவனம் 16 ஜூன், 2022 அன்று நிறைவு செய்துள்ளது என்று உறுப்பினர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பதாவது

1. சிறப்பு அலுவல் (a) தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளபடி நிறுவனத்தின் பெயரை “மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்” என்பதிலிருந்து “ஜேஎம்ஜே பின்டெக் லிமிடெட்” என மாற்றுவதற்கு ஒப்புதல் அளிக்க சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட் (சிடிஎஸ்எல்) வழங்கும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு தளம் வழியாக தபால் வாக்கு மூலம் பரிசீலிக்கப்படுகிறது.
2. மின்னணு வாக்குப் பதிவு வியாழக்கிழமை, 16 ஜூன், 2022 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்கி வெள்ளிக்கிழமை, 15 ஜூலை, 2022 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது. அதன்பிறகு, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நிறுத்தப்படும் மற்றும் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் வாக்களிப்பது அனுமதிக்கப்படாது.
3. கட் ஆப் தேதியான 10 ஜூன் 2022 அன்று நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் பலன்பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மட்டும் அவர்களின் வாக்குகளை அளிக்க தகுதியானவர்கள் ஆவார்கள்.
4. குழு திருமதி. லட்சுமி சுப்பிரமணியன், பிராக்டிசிங் நிறுவன செயலாளர் அவர்களை தபால் வாக்குப் பதிவுக்கான ஆராய்வாளராக நியமித்துள்ளது.
5. தபால் வாக்குச் சீட்டைப் பெறாத உறுப்பினர்கள் investor@melnbfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அதைப் பெறலாம்.
6. மின்னணு வாக்களிப்பது தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால், அது குறித்து www.melnbfc.com–ல் உதவிப் பிரிவில் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQகள்) மற்றும் மின்னணு வாக்களிப்பு கையேட்டைப் பார்க்கவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 1800 22 55 33 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.
7. மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி தொடர்புடைய அனைத்து குறைகள் குறித்தும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மராத்தான் பியூச்சர்க்ஸ், மபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400013 அல்லது helpdesk.evoting@cdslindia.com–க்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 1800 22 55 33 என்ற எண்ணிற்கு அழைக்கவும்.

தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், https://investors.cameoindia.com என்ற இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் தற்காலிகமாக தங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்குமாற்று முகவரிடம் பதிவு செய்து கொள்ளலாம் மற்றும் அதில் வழிகாட்டப்படும் நடைமுறையை பின்பற்றி பதிவு செய்து கொள்ள வேண்டும். மின்னஞ்சல் முகவரியை வெற்றிகரமாகப் பதிவுசெய்த பிறகு, இந்த தபால் வாக்குச் சீட்டுக்கான மின்னணு வாக்குப்பதிவைச் செயல்படுத்த, பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லுடன், அறிவிப்பின் மின்னணு நகல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு செயல்முறையை உறுப்பினர்கள் பெறுவார்கள். ஏதேனும் கேள்விகள் இருந்தால், அதுகுறித்து உறுப்பினர்கள் பதிவாளர் மற்றும் பங்குமாற்று முகவரின் https://investors.cameoindia.com–க்கு எழுதலாம்.

தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.melnbfc.com பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் சிடிஎஸ்எல் இணையதளமான www.evotingindia.com ஆகியவற்றில் கிடைக்கிறது. தபால் வாக்கு முடிவுகள் 16 ஜூலை 2022 சனிக்கிழமை அல்லது அதற்கு முன் அறிவிக்கப்படும். இந்த முடிவுகள் பிஎஸ்இ லிமிடெட்டிற்கு தெரிவிக்கப்படும் மற்றும் www.melnbfc.com என்ற நிறுவனத்தின் இணையதளத்திலும் வைக்கப்படும்.

**மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்டிற்காக**
**ஜோஜு மடத்தும்பாடி ஜானி**
**நிர்வாக இயக்குனர்**

**இடம்: சென்னை**
**தேதி:16 ஜூன் 2022**


# சசிகலா மீது குற்றம் சுமத்திய கர்நாடக போலீஸ் அதிகாரி ரூபா ஐபிஎஸ் மீதான வழக்கு ரத்து

பெங்களூரு, ஜூன் 16–

சசிகலா மீது குற்றம் சுமத்திய கர்நாடக போலீஸ் அதிகாரி ரூபா மீது தொடரப்பட்ட மானநஷ்ட வழக்கை, கர்நாடக உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில், சசிகலாவுக்கு சிறப்பு வசதிகள் செய்து கொடுக்க, ரூ.2 கோடி கைமாறியதில் சிறைத்துறை கூடுதல் டி.ஜி.பி.யாக இருந்த சத்திய நாராயணராவுக்கு தொடர்பு உள்ளதாக சிறைத்துறை டி.ஐ.ஜி.யாக இருந்த ரூபா, 2017ம் ஆண்டு ஜூலை மாதம் 12ந் தேதி கர்நாடக அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்திருந்தார். இந்த குற்றச்சாட்டு எழுந்த அதே ஆண்டு ஜூலை 31ந் தேதி சத்திய நாராயணராவ் பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டார்.

இந்த குற்றச்சாட்டை சத்திய நாராயணராவ் மறுத்ததுடன், 2018 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ந் தேதி பெங்களூரு 9வது கூடுதல் மெட்ரோ பாலிட்டன் மாஜிஸ்திரேட்டு நீதிமன்றத்தில் சத்திய நாராயணராவ், ஐ.பி.எஸ். அதிகாரி ரூபாவிடம் ரூ.20 கோடி கேட்டு மானநஷ்ட வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் உரிய விளக்கம் அளிக்க கோரி ரூபாவுக்கு கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ந் தேதி நீதிமன்றம் சம்மன் அனுப்பியது.

இதனை எதிர்த்து கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ரூபா மனு தாக்கல் செய்திருந்தார். ஐ.பி.எஸ். அதிகாரியான தன் மீது, மற்றொரு அரசு அதிகாரி மானநஷ்ட வழக்கு தொடர அனுமதி இல்லை என்றும், மானநஷ்ட வழக்கை 6 மாதத்திற்குள் தொடர வேண்டும், ஆனால் சத்திய நாராயணராவ் 6 மாதம் கழித்து தான் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், இதுபோன்ற காரணங்களால், தனக்கு வழங்கப்பட்ட சம்மன் மற்றும் இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்றும் மனுவில் கூறி இருந்தார்.

அந்த மனு மீது விசாரணை நடத்திய கர்நாடக உயர்நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 11ந் தேதி ரூபா மீதான விசாரணைக்கும், அவருக்கு அனுப்பப்பட்ட சம்மனுக்கும் இடைக்கால தடை விதித்து உத்தரவு பிறப்பித்திருந்தது. மேலும் ரூபா தாக்கல் செய்த மனு மீதான விசாரணை கர்நாடக உயர்நீதிமன்றம் நீதிபதி நாகபிரசன்னா முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இந்நிலையில், அந்த வழக்கில் தீர்ப்பளித்த கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி நாகபிரசன்னா, ஒரு ஐ.பி.எஸ். அதிகாரி மீது மற்றொரு அதிகாரி அரசிடம் அறிக்கை தாக்கல் செய்வது, மானநஷ்டம் ஆகாது. அரசிடம் அறிக்கை மட்டுமே தாக்கல் செய்யப்பட்டு இருப்பதால் மானநஷ்ட வழக்குக்கு இது பொருந்தாது. மேலும் ஐ.பி.எஸ். அதிகாரியை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அரசிடம் அனுமதி பெற வேண்டும். அதனையும் பெங்களூரு கீழ் நீதிமன்றத்தில் பெறப்பட வில்லை என்று கூறி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.


**SHRIRAM TRANSPORT FINANCE CO LTD**
PARANUR BRANCH — VECHILE FOR SALE

| S.NO. | VEH.NO | MAKE | MODEL | YEAR OF MODEL |
|---|---|---|---|---|
| 1. | TN19AA-4583 | MAHINDRA | MAHINDRA MAXXIMO-P | 2016 |

CONTACT NO : SHANMUGA SUNDARAM V - 9626693509